# வீட்டை எரித்த விளக்கு 9

**காட்சி 1**

இடம் : குருவிக்கூடு
நேரம் : முன்னிரவு
பாத்திரங்கள் : ஆண் குருவி, பெண் குருவி, குருவிக்குஞ்சு

**பெண் குருவி :** எல்லாரும் வெளிச்சத்தில் வாழ்கிறார்கள். நாங்கள் மட்டும் இருட்டில் வாழ்வதா?

**ஆண் குருவி:** எப்பொழுதும் இதையே தான் சொல்கிறீர்கள்! ஏன் சிட்டு, இம் மனிதரைப் போல நாங்கள் வாழ முடியுமா என்ன?



**குருவிக்குஞ்சு :** அப்பா! அப்பா! எப்படியாவது எங்கள் கூட்டுக்கு வெளிச்சம் கொண்டு வாருங்கள் அப்பா.

**ஆண் குருவி :** ம்.... சரி! தாயும் மகளும் ஏதோ ஆசைப்படுகிறீர்கள், முயற்சி செய்கிறேன்.

**காட்சி 2**

இடம் : காடு
நேரம் : மாலை
பாத்திரங்கள் : ஆண் குருவி, மைனா

**மைனா :** இத்தனை நாள் இருட்டில் தானே இருந்தீர்கள். திடீரென்று ஏன் இந்தக் கவலை?

**ஆண் குருவி :** என் மகள் மிகவும் ஆசைப்படுகிறாள்.

**மைனா :** நண்பா! நான் ஒரு வழி சொல்லட்டுமா?

**ஆண் குருவி :** என்ன வழி? சீக்கிரம் சொல்லுங்கள்.

**மைனா :** அதோ! அந்த வேலி ஓரம் பாருங்கள்.



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

**ஆண் குருவி:** வேலி ஓரமா! என்ன அது?

**மைனா :** இது மின்மினிப் பூச்சி, 'பளிச் பளிச்' சென்று மின்னுகிறது. அதைக் கொண்டு போய் உங்கள் கூட்டில் வையுங்கள்.

**ஆண் குருவி :** நன்றி நண்பா!
(ஆண் குருவி மின்மினிப் பூச்சியை எடுத்துக் கொண்டு தன் கூட்டுக்குச் சென்றது.)

### காட்சி 3

| | | |
|---|---|---|
| இடம் | : | குருவிக் கூடு |
| நேரம் | : | முன்னிரவு |
| பாத்திரங்கள் | : | ஆண் குருவி, பெண் குருவி, குருவிக்குஞ்சு |

**குருவிக் குஞ்சு:** நாங்கள் கேட்டபடி விளக்குடன் வந்துவிட்-டீர்களே!

**ஆண் குருவி :** இது விளக்கு இல்லை. மின்மினிப் பூச்சி. இது நம் கூட்டிற்கு வெளிச்சத்தைத் தரும்.
(ஆண்குருவி மின்மினிப் பூச்சியைக் கூட்டில் வைக்கிறது சிறிது நேரம் கழித்து.......)

**பெண் குருவி :** உந்த வெளிச்சம் போதுமானதாக இல்லையே! நல்ல விளக்கே கிடைக்க வில்லையா?

**ஆண் குருவி :** நாளை கொண்டு வருகிறேன்.

### காட்சி 4

**ஆண் குருவி கூட்டிற்கு வருகிறது**

**குருவிக் குஞ்சு:** அப்பா வந்து விட்டார், அப்பா வந்துவிட்டார்.

**பெண் குருவி:** ஆகா! அந்த விளக்கை விட இது வெளிச்சமாக இருக்கிறதே!

**குருவிக் குஞ்சு:** அப்பா! சீக்கிரம் அதைக் கூட்டில் வையுங்கள். (குருவி கொள்ளிக் குச்சியைக் கூட்டில் வைக்கிறது)



**அனைவரும் :** தீ ...... தீ ...... தீ ....... கீச் ..... கீச் ..... கீச் கத்துகின்றன. (கூடு எரிகின்றது)



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

### அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| இருட்டு | - | අඳුර |
| குருவிக்கூடு | - | කුරුළු කූඩුව |
| மின்னுகிறது | - | දිලිසෙනවා |
| விளக்கு | - | -පහන |
| வெளிச்சம் | - | ආලෝකය |
| பூச்சி | - | -කුරුමිනියා |
| சிட்டு | - | ගේකුරුල්ලා |
| திடீரென்று | - | උන්හිටිගමන් |
| சீக்கிரம் | - | -ශීඝ්‍රයෙන් |
| வேலி | - | වැට |
| ஓரம் | - | -අයින |
| தீ | - | -ගින්දර |

### கிரகித்தற் பயிற்சி

பின்வரும் வினாக்களுக்க விடைதருக.
පහත සඳහන් ප්‍රශ්නවලට පිළිතුරු සපයන්න.

1. பெண் குருவியும், குருவிக்குஞ்சும் ஆண்குருவியிடம் எதை கொண்டுவந்து தருமாறு கேட்டன?
2. ஆண் குருவிக்கு உதவிய பறவை எது?
3. மைனா கொடுத்த விளக்கு எது?
4. குருவி தன் கூட்டிற்குக் கொண்டு வந்த விளக்குகள் எவை?
5. குருவியின் கூட்டிற்கு என்ன நடந்தது?
6. இப்பாடத்தின் மூலம் நீங்கள் கற்றுக் கொண்ட விடயம் என்ன?



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

## இலக்கணம்

### சுட்டெழுத்துக்கள்

தமிழ்மொழியில் அ, இ, உ என்னும் எழுத்துக்கள் சுட்டுப்பொருளில் வரும் போது சுட்டெழுத்துக்கள் என அழைக்கப்படுகின்றன.

| அ | இ | உ |
|---|---|---|
| அவன் | இவன் | உவன் |
| அவள் | இவள் | உவள் |
| அவர்கள் | இவர்கள் | உவர்கள் |
| அது | இது | உது |
| அவை | இவை | உவை |

'அ' என்ற சுட்டெழுத்து (சேய்மையில்) தூரத்தில் உள்ள பொருளைக் குறிக்கும்.

'இ' என்ற சுட்டெழுத்து அண்மையில் உள்ள பொருளைக் குறிக்கும்.

'உ' என்ற சுட்டெழுத்து முன்னிலையில் உள்ள பொருளைச் சுட்டிக்காட்டப் பயன்படுகிறது.

| அ | இ | உ |
|---|---|---|
| அம்மனிதன் | இம்மனிதன் | உம்மனிதன் |
| அக்குதிரை | இக்குதிரை | உக்குதிரை |
| அச்சிறுமி | இச்சிறுமி | உச்சிறுமி |
| அப்புத்தகம் | இப்புத்தகம் | உப்புத்தகம் |
| அவ்வீடு | இவ்வீடு | உவ்வீடு |



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

இங்கு, மனிதன், குதிரை, சிறுமி புத்தகம், வீடு என்பன அண்மையிலும் சேய்மையிலும் சுட்டிக்காட்டப்படுகின்றன.
சில வேளைகளில் அ, இ, உ என்னுஞ் சுட்டெழுத்துக்கள் அந்த, இந்த, உந்த எனத் திரிந்து வரும்.

| | | |
|---|---|---|
| அந்த மனிதன்<br>அந்தப் பெண்<br>அந்த வண்டி | இந்த மனிதன்<br>இந்தப் பெண்<br>இந்த வண்டி | உந்த மனிதன்<br>உந்தப் பெண்<br>உந்த வண்டி |







## செயற்பாடு I

**கீழே அ, இ, உ என்னும் சுட்டெழுத்துக்களாலான சொற்கள் சில தரப்பட்டுள்ளன. அவற்றைக் கொண்டு தரப்பட்டுள்ள அட்டவணையைச் சரியாக நிரப்புக.**

அது, இவள், அம்மனிதன், உது, இவர்கள், அக்காடு, இது, இக்குதிரை, அவன், உவை, அச்சிறுமி, உவன், அவ்வீடு, உம்மனிதன், இப்பாட்டு, அந்தநாள், இந்த நிலவு, உந்த இடம்.



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

| அகச்சுட்டு | புறச்சுட்டு |
| --- | --- |
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |

## செயற்பாடு II

பாடத்தில் வரும் அகச் சுட்டு, புறச்சுட்டுச் சொற்களை அட்டவணைப்படுத்துங்கள்.

| அகச்சுட்டு | புறச்சுட்டு |
| --- | --- |
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

## செயற்பாடு III

**பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் அமையுங்கள்**
පහත සඳහන් වචන යොදා වාක්‍ය සාදන්න.

இவன், அவன், அம்மாடு, இவ்வீடு, இம்மனிதர், அது, இது, அந்த வேலி, உந்த வெளிச்சம், அதை

1. ----------------------------------------------------------------------------------------------------

2. ----------------------------------------------------------------------------------------------------

3. ----------------------------------------------------------------------------------------------------

4. ----------------------------------------------------------------------------------------------------

5. ----------------------------------------------------------------------------------------------------

6. ----------------------------------------------------------------------------------------------------

7. ----------------------------------------------------------------------------------------------------

8. ----------------------------------------------------------------------------------------------------

9. ----------------------------------------------------------------------------------------------------

10. ----------------------------------------------------------------------------------------------------

11. ----------------------------------------------------------------------------------------------------

12. ----------------------------------------------------------------------------------------------------



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக